சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 28 (LW-39) | நாள் | 01.09.2025 |
| பெயர் | டாக்டர். ரஞ்சனி சுபா | தொழில் | மருத்துவர் |
| தந்தை பெயர் | உ. ராஜாராம் | வயது | 30 |
| கிராமம் | மயிலாடுதுறை | தாலுக்கா | |

(1 முதல் 10 குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் சிறையிலிருந்து காணொலி ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் குற்றம்சாட்டப்பட்ட நபர் Split up in Spl.SC No. 26/2025. குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுச்சேரியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்ரா மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சீனியர் ரெசிடெண்ட் ENT Specialist ஆக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2023-2024 மயிலாடுதுறை அரசு பெரியார் மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக இருந்தபோது 20.03.2024 அன்று இரவு 10.20 மணியளவில் சரவணன், த/பெ. சுப்ரமணியன் வயது 29 என்பவரை அவர் உறவினர் துரைக்கண்ணு என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் தன்னை நான்கு அடையாளம் தெரியாத நபர்கள் அரிவாளால் வெட்டி துன்புறுத்தியதாக சொன்னார். அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அசாஆ 35 ஆவணம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ள விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ நகல் என்னால் வழங்கப்பட்டதாகும். நான் தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை விவரங்களை பார்த்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள்

1/9/25

என்று சான்றிதழ் வழங்கினேன். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**5 முதல் 8 குற்றம்சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சரவணன் மதுபானம் அருந்திய வாடை வீசியதால் அவர் மதுபானம் அருந்தியிருக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. காவல் துறையினர் சரவணனுக்கு தஞ்சாவூர் மருத்துவமனையில் வழங்கிய சிகிச்சை குறிப்புகளை காண்பித்தனால் அதன் மூலம் நான் சான்று வழங்கினேன். காவல் துறையினர் கொடுத்த குறிப்புகள் அடிப்படையில் சான்று வழங்கிய விவரத்தை போலிசார் விசாரணையிலும், என் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் காவல் துறையினர் தவறான தகவல்களை சொல்லி காயச்சான்றிதழ் பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல. காயச்சான்றிழில் கண்டுள்ள காயங்கள் அரிவாளை தவிர வேறு எந்த கூர்மையான ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

1/9/25

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

1/9/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை